***பிரசார் பாரதி***
***அகில இந்திய வானொலி, சென்னை***
***26 03 2026 THURSDAY 12 40 PM***
***ஆகாஷ்வாணி - செய்திகள்***

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

*1. அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.*

*2. மின்னணு பொருட்களின் உற்பத்தியும், ஏற்றுமதியும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*3. ஆந்திராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.*

*4. வணிக கப்பல் போக்குவரத்திற்காக Hormuz நீரிணையை பயன்படுத்த இந்தியா உள்ளிட்ட 5 நாடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.*

*5. ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியின் கலப்புக் குழுப் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

>>>>>><<<<<<

*அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.*

*வேட்புமனுக்களை விலக்கிக் கொள்வதற்கான காலஅவகாசம் இன்று முடிவடைவதை அடுத்து, மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்று எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.*

*இதேபோல், கோவா, கர்நாடகா, திரிபுரா, நாகாலாந்து மாநிலங்களுக்கு உட்பட்ட 5 சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியலும் இன்று வெளியிடப்படுகிறது.*

*இந்த சட்டப்பேரவை தேர்தல் மற்றும் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும்.*

*வாக்கு எண்ணிக்கை மே மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.*

>>>>>><<<<<<

*சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*இதற்காக அமைக்கப்பட்டுள்ள பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு, உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களை பறிமுதல் செய்து வருவதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், உரியவர்களிடம் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் திருப்பி வழங்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கான கைபேசி செயலியில் பொதுமக்கள் புகார்களை தெரிவிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.*

>>>>>><<<<<<

உலக அளவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பெரிய அளவில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தகவல் தொழில்நுட்பத்துறையின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, மின்னணு பொருட்களின் உற்பத்தி, 6 மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

ஏற்றுமதியும் 8 மடங்கு அதிகரித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜி.7 அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக, வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் பிரான்ஸ் சென்றடைந்தார்.

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலுக்கு தீர்வு காண்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான மாநாடு, Cameroon-ன் Yaounde-ல் இன்று தொடங்குகிறது.

166 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

உலக வர்த்தக அமைப்பில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருமதி. சோனியா காந்தியின் உடல்நிலை சீராக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உடல்நலக்குறைவு காரணமாக, கடந்த செவ்வாய்க்கிழமை தில்லியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர், தொடர்ந்து மருத்துவ கண்காணிப்பில் உள்ளதாகவும் மருத்துவமனையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

உலகின் புகழ்பெற்ற தலைவர்களுக்கான பட்டியலில் பிரதமர் திரு. நரேந்திர மோடி முதலிடத்தில் உள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனம் நடத்திய ஆய்வில், 68 சதவீத அங்கீகாரத்துடன் திரு. நரேந்திர மோடி முதலிடத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelin மற்றும் தென்கொரிய அதிபர் திரு. Lee Jee Myung 62 சதவீதத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளனர்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் 39 சதவீதத்துடன் பின்தங்கியுள்ளார். முதல் பத்து இடங்களுக்கான பட்டியலில் கூட அவர் இடம்பெறவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஆந்திராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர், 22 பேர் காயமடைந்தனர்.

தெலங்கானாவின் Jagtiyal-லிருந்து நெல்லூர் மாவட்டம் Kaligari-க்கு சென்று கொண்டிருந்த பேருந்து, Markapuram மாவட்டத்திற்கு உட்பட்ட ராயவரம் அருகே சென்று கொண்டிருந்த போது லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்து காரணமாக, பேருந்து தீப்பிடித்து எரிந்ததாகவும் அவர்கள் கூறினர்.

காயமடைந்தவர்களில் 3 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி அறிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று சமூகவலைதளத்தில் கூறியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவும் இந்த விபத்து குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

உத்ராகண்டில், Dehrudun - Pithoragarh இடையேயான விமான போக்குவரத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமி இன்று தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இதன்மூலம் எல்லையோர பகுதியில் வசிப்பவர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று கூறினார்.

இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளதன் காரணமாக, இந்நாள் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடுவிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக திரு. புஷ்கர் சிங் தாமி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் சீராக விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இதன் காரணமாக பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் எண்ணெய் நிறுவனங்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ள போதிலும், பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்த்தப்படவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக, நலிவடைந்த பிரிவினர் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா பொதுச்செயலாளர் திரு. *Antonio Guterres* கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை கூறியுள்ள அவர். இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

*Hormuz* நீரிணை வழியான கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ளதால், சர்வதேச அளவில் எண்ணெய் எரிவாயு மற்றும் உர விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினை நீடிக்கும் பட்சத்தில் பாதிப்பு அதிகமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு தீர்வு காண தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஐ.நா மேற்கொண்டு வருவதாகவும் திரு. *Antonio Guterres* தெரிவித்துள்ளார்

>>>>>><<<<<<

இந்தியா உட்பட 5 நாடுகள் *Hormuz* நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. *Seyed Abbas Araghchi* அறிவித்துள்ளார்.

ஈரானின் அரசு ஊடகத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், வணிக கப்பல் போக்குவரத்திற்காக இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நட்பு நாடுகள் என்ற அடிப்படையில் இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் ஈராக் நாடுகளுக்கு இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈரானுக்கு எதிராக செயல்படும் நாடுகளுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்றும் திரு. *Seyed Abbas Araghchi* திட்டவட்டமாக கூறினார்.

>>>>>><<<<<<

பங்களாதேஷில் பேருந்து ஒன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரிழந்தனர்.

*Rajbari* மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் *Daulatdia* படகு முனையத்தில் பேருந்து படகில் ஏற முயன்ற போது, கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

*பேருந்தில் இருந்த பயணிகள் சிலரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.*

*இந்த விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காக, 5 பேர் கொண்ட குழுவை பங்களாதேஷ் அரசு நியமித்துள்ளது.*

**>>>>>><<<<<<**

*ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியின் கலப்புக் குழுப் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா, கஜகஸ்தானை வென்றது.*

**>>>>>><<<<<<**

*உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி, Morocco-வின் Tangier-ல் தொடங்கியது.*

*இந்தியாவின் சார்பில் Maheswari Chauhan, Kynan Chenai உட்பட 20 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

**>>>>>><<<<<<**

*இணையதளம் வாயிலாக நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் Nihal Sarin பட்டம் வென்றார்.*

**>>>>>><<<<<<**

*பார்வைத் திறன் குறைபாடு உடையவர்களுக்கான உலக கோப்பை ஜூடோ போட்டியில், இந்தியாவின் Renuka Salave வெண்கலப்பதக்கம் வென்றார்.*

**>>>>>>END<<<<<<**